

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 341 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 05 – திங்கள்கிழமை 21 ஜூலை 2025 – சென்னை 32 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 341: Thiruvalluvar Year - 2056 - Aadi 05 - Monday 21 July 2025 - Chennai 32 Pages ₹ 5.00


## மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.10,997 கோடி கடன்! ரூ.2,118 கோடி கடன் தள்ளுபடி!

# 66 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.53,340 கோடி பயிர்க் கடன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சியில் கூட்டுறவுத் துறை சாதனை!

**சென்னை, ஜூலை 21-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் நான்கு ஆண்டுகளில் கூட்டுறவுத் துறை வாயிலாக பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.**

**66,24,955 விவசாயிகளுக்கு பயிர்க் கடன் ரூ. 53,340.60 கோடி! 11.70 இலட்சம் மக்களின் நகைக் கடன் தள்ளுபடி ரூ. 4,904 கோடி! 1,01,963 சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடி ரூ. 2,118.80 கோடி! மகளிர் சுய உதவிக்குழு கடன் உச்சவரம்பு உயர்த்தப்பட்டு ரூ. 10,997 கோடி கடன் !**

**11,88,440 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்புத் தொழில் வளர்ச்சி கடன் ரூ. 6372 கோடி! 47,221 மாற்றுத்திறனாளிகளுக்கு கடன் ரூ. 225.94 கோடி! 16578 பணிபுரியும் மகளிருக்கு கடன் ரூ.470 கோடி! 49,000 மகளிர் தொழில் முனைவோருக்கு கடன் ரூ.283.27 கோடி! இவைகளுடன் தமிழ்நாடு அரசுக்கு விருதுகளும் கிடைத்துள்ளன.**

1844ஆம் ஆண்டில் கூட்டுறவு இயக்கம் இங்கிலாந்து நாட்டில் ரோச்டேல் பயனீர் என்பவரால் முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்டது. அதன்பின் உலகம் முழுவதும் பரவிய கூட்டுறவு இயக்கம் இந்தியாவில் 1904 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் அறிமுகம் செய்யப்பட்டது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 1932 ஆம் ஆண்டில் சென்னை மாகாண கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் ஏற்படுத்தப்பட்டு கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு வழி வகுக்கப்பட்டது.

**“கூடித் தொழில் செய்” என்றார் பாரதியார். “கூடை முறம் கட்டுநரும் கூடித் தொழில் செய்தால் தேடிவரும் லாபம் சிறப்பு வரும் தோழர்களே”** என்றார் புரட்சிக் கவிஞர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், **“கூட்டுறவு என்பது மேகங்கள் கூடுவது போல இருக்க வேண்டும், மேகங்கள் கூடுவது மழையைத் தருவதற்காக; அதேபோல் மக்களுக்கு நன்மைகளைக் கொடுப்பதற்காகக் கூட்டுறவு இருக்க வேண்டும். அந்த வகையில் கழக ஆட்சியில் கூட்டுறவுத் துறை நல்ல முறையில் செயல்படும்”** என்று 28.8.1989 அன்று சேலம் மத்திய கூட்டுறவு வங்கி திறப்பு விழாவில் குறிப்பிட்டார்கள்.

கூட்டுறவுத் துறை மக்களுக்கு, குறிப்பாக ஏழை எளிய நலிந்த பிரிவு மக்களுக்கு நன்மைகளைச் செய்வதற்கு உருவான ஒரு துறை. இத்துறை மூலம் பல பணிகள் நிறைவேற்றப்பட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது, நாடும் வளர்ந்துள்ளது.




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.1.2025 அன்று சிவகங்கையில் நடைபெற்ற அரசு விழாவில் 53,039 பயனாளிகளுக்கு 161கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கூட்டுறவு சங்கங்களின் முக்கிய பணி பொதுமக்களுக்கும் தொழில் அமைப்புகளுக்கும் கடன் வழங்கி முன்னேற்றங்களுக்கு வழி வகுப்பதே ஆகும். அரசு கூட்டுறவு அமைப்புகள் மூலம் மக்களுக்குக் கடன் உதவிகளை வழங்கி வருகிறது. கடன்களால் மக்கள் சிரமப்பட நேரும் காலங்களில் கடன்களை ரத்து செய்தும் உதவுகிறது அரசு.

**நகைக் கடன்களை தள்ளுபடி செய்த ‘திராவிட நாயகர்’!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021 தேர்தலுக்கு முன் தேர்தல் அறிக்கையில் கூறியபடி, கூட்டுறவு நிறுவனங்களில் ஒரு குடும்பத்தில் 5 பவுனுக்கு உட்பட்டு நகைக் கடன் பெற்று 31.3.2021 வரை நிலுவையிலிருந்த நகைக் கடன் தொகை ஏறத்தாழ .6,000 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து ஆணையிட்டார்கள். அதன்படி, 11.70 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.4,904 கோடி அளவிற்குத் தள்ளுபடிச் சான்றிதழுடன், அவர்கள் அடமானம் வைத்த நகைகளும் திருப்பி வழங்கப்பட்டுள்ளன.

**சுய உதவிக் குழு கடன் தள்ளுபடிகளைத் செய்த முதல்வர்!**

கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்களில், 31.3.2021 அன்று நிலுவையில் இருந்த கடன் தொகை ரூ.2,118.80 கோடி தள்ளுபடி செய்யப்பட்டு 1,01,963 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 10,56,816 மகளிர் பயன்பெற்றுள்ளனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உச்ச வரம்பு ரூ.20 இலட்சம் என்பதை ரூ.30 இலட்சமாக உயர்த்தி 1,90,499 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.10,997.07 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**முதலமைச்சர் அவர்கள் தாராளமாக வழங்கிய பயிர்க் கடன்கள்!**

பயிர்க் கடன்களை உரிய கெடு தேதிக்குள் திரும்பச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில்லாப் பயிர்கடன்களாக 66,24,955 விவசாயிகளுக்கு ரூ.53,340.60 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**உழவர் கடன் அட்டை திட்டத்தின் கீழ் கால்நடை வளர்ப்பு மற்றும் அவை சார்ந்த தொழில்களுக்கான நடைமுறை மூலதனக் கடன்!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 20212022 ஆம் ஆண்டு முதல் கால்நடை வளர்ப்பு மற்றும் அவை சார்ந்த இதர பணிகளுக்குப் பராமரிப்புக் கடன் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். 11,88,440 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு மற்றும் அதன் தொடர்புடைய பணிகளுக்காக ரூ.6,372.02 கோடி கடன் வழங்கியுள்ளது திராவிட மாடல் அரசு.

**கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்கள்!**

ஆண்டிற்கு 5 சதவீத வட்டி விகிதத்தில் 19,358 கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு ரூ.63.22 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்கள்!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி மாற்றுத்திறனாளிகளைச் சுயசார்புடையவர்களாக மாற்றவும், நிதி சுதந்திரத்தை வளர்க்கவும், 47,221 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.225.94 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**பணிபுரியும் பெண்கள் மற்றும் மகளிர் தொழில் முனைவோர்க்குக் கடன்கள்!**

சமூக நீதியை மேம்படுத்தும் வண்ணம் 16,578 பணிபுரியும் பெண்களுக்கு ரூ.470.01 கோடியும், 49,000 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.283.27 கோடியும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**நாட்டுப்புறக் கலைஞர்களுக்குக் கடன்!**

நாட்டுப்புறக் கலைகளை வாழ்வாதாரமாகக் கொண்டு தொழில் புரிகின்ற கலைஞர்கள் நலிவடையாமல் காத்திட அக்கலைஞர்களின் சமூக, பொருளாதார, நிதி நிலையை மேம்படுத்தும் வண்ணம், இதுவரை 4,494 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ரூ.18.80 கோடி அளவிலான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**அண்ணல் அம்பேத்கர் வணிக முன்னோடி திட்டம்!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## சட்டமன்றத் தேர்தலில் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி பெற

# தமிழ்நாட்டை ஓரணியில் திரட்டுவோம்!

## தி.மு.க. இளைஞரணி தொடங்கி 46ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி, கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிக்கை!



**சென்னை, ஜூலை 21-**

**மதுரை ஜான்சி ராணி பூங்காவில் பூத்த தி.மு.க. இளைஞரணி, 46ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க., வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றிட ஓரணியில் தமிழ்நாட்டை திரட்டுவோம் என, துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தமிழர்களை உயர்த்தும் திராவிட இயக்கத் தத்துவங்களை அடுத்தடுத்து வரும் இளம் தலைமுறையின் ரத்த அணுக்களில் ஏற்றும் கொள்கைப் பாசறையாம் தி.மு.க. இளைஞரணி தொடங்கப்பட்ட நாள் இன்று (20.7.2025) என்று குறிப்பிட்டுள்ளார்.

மதுரை ஜான்சி ராணி பூங்காவில் பூத்த தி.மு.க. இளைஞரணி, 46ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழிகாட்டலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால், உருவாக்கப்பட்ட இளைஞரணி எனும் தீரர் படையின் இன்றைய செயலாளராகப் பணியாற்றுவதை எண்ணி பெருமை கொள்கிறோம்.

தமிழ்நாட்டின் இளைஞர்களை கொள்கை மயப்படுத்தும் இலக்கில் இருந்து சிறிதும் விலகாமல் கட்டுப்பாட்டுடன் கடமையாற்றும் நம் இளைஞரணி, தி.மு.க.வின் நாற்றங்காலாக திகழ்கிறது.

களப் பணியிலும் கொள்கை நெறியிலும் இளையச் சமுதாயத்தைத் தயார்படுத்த இளைஞரணி மேற்கொண்டு வரும் பணிகள் இன்னும் நூறு ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டைக் காத்து நிற்கும்.

2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க., வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றிட ஓரணியில் தமிழ்நாட்டை திரட்டுவோம், தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க, தலைவர் இட்ட கட்டளையை நிறைவேற்ற களம் புகுவோம்; பாசிசத்தை நொறுக்குவோம்! தமிழ்நாடு வெல்லும்! என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.